செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1111 | 1970 ஆகஸ்ட் 18 செவ்வாய்க்கிழமை ★ | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka
RECEIVED
1971 7 - 8
Periodicals Division

## இடத்துக்கிடம் மாறுபட்ட உபதேசம்

# சேகுவேரா தி.மு.க.வுக்கு வலை விரிக்கின்றதா?

### "சேகுவேரா" புரட்சி இயக்கத்தினர், இலங்கை திராவிட முன்னேற்ற கழகத்தை தமது நன்மைக்கு ஒரு கருவியாக்க முயற்சிக்கின்றனரா?

இக் கேள்விக்கு விடை காணும் முயற்சியில் பொலீஸ் பகுதியினர் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

தற்போது பொலீஸ் கண்காணிப்பின்கீழ் இருக்கும் சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்த பலர், மலைநாட்டுப் பகுதிகளில் ஒருசில தி. மு. கழகப் பிரமுகர்களுடன் நெருங்கிப் பழகிவருவதாகக் கிடைக்கப்பட்ட தகவல்களை அடுத்தே இச் சந்தேகம் எழுந்துள்ளது.

இது இவ்வாறிருக்க நாட்டின் ஏனைய பகுதிகளில் இருக்கும் சேகுவேரா இயக்கத் தலைவர்கள், சிங்களவர் அல்லாதோர் குறித்து தமது அங்கத்தவர்களை எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

"ஜனதா விமுக்தி பெரமுனே" என அழைக்கப்படும் இந்த சேகுவேரா இயக்கம் அனுராதபுரப் பகுதியில் தீவிரமடைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இந்த இயக்கத்தின் எந்தவொரு நடவடிக்கையையும் முறியடிக்க பொலீஸார் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. (ர)

## ஐ. தே. க. கொள்கைகள் விரைவில் சீரமைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் சீரமைப்பு செய்வதற்காக விசேஷ கமிட்டியொன்றை நியமிப்பதென ஐ. தே. கட்சியின் செயல் கமிட்டி தீர்மானித்துள்ளது.

புதிய திட்டங்கள் கட்சியின் அடுத்த வருடாந்த மகா நாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

இவ் வருடத்தில் நடைபெறவிருந்த கட்சியின் வருடாந்த மகாநாட்டை 1971-ம் வருட ஆரம்பம் வரை ஒத்திவைப்பதெனவும் ஐ. தே. கட்சியின் செயல் கமிட்டி தீர்மானித்துள்ளது.

செப்டம்பர் மாதம் 1-ம் திகதி நடைபெறவிருக்கும் செயல் கமிட்டியின் அடுத்த கூட்டத்தில் பிரஸ்தாப விசேஷ கமிட்டி நியமிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று நடைபெற்ற கூட்டத்திற்கு கட்சியின் தலைவரான திரு. டட்லி சேனநாயக்கா தலைமை வகித்தார்.

(ர)

## ரயில்-பஸ்ஸை ஓடவிட்டு விபத்து பற்றி விசாரணை

புத்தளம், ஆக. 17

பாலாவியில் ஏற்பட்ட பயங்கர ரயில் — பஸ் விபத்துபற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மூவர் கமிட்டி புத்தளத்தில் மூன்று நாட்களாக விசாரணை நடத்தியது.

விபத்தில் சம்பந்தப்பட்டது போன்றதொரு பஸ்ஸையும், ரயிலையும் விபத்து நடந்த இடத்தில் ஓடவிட்டு விபத்து நடந்த விதத்தையும், விபத்தை தடுக்க சாரதிகளுக்கு இருந்திருக்கக்கூடிய அவகாசத்தையும் கமிட்டி நுணுக்கமாக ஆராய்ந்தது.

புத்தளம் இ. போ. ச. டிப்போவுக்குச் சென்ற இக் கமிட்டி, விபத்துக்குள்ளான பஸ்ஸைச் செலுத்திய சாரதிபற்றியும் பூரண விசாரணை நடத்தியது.

இதையடுத்து, புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலைக்குச் சென்ற இக் கமிட்டி சம்பந்தப்பட்ட ரயிலை பார்வையிட்டதோடு ரயில் சாரதியையும் விசாரணை செய்தது. (ர)

## தகுந்த கட்டடம் தேவை

லேக் ஹவுஸ் கருமங்கள்பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ரோயல் கமிஷன் தனது காரியாலயமாகப் பாவிக்கக்கூடிய தகுதியான கட்டடம் ஒன்றைத் தேடிவருகின்றது. (ர)

## இந்திரா காந்தி லுஸாக்கா செல்வார்

புதுடில்லி, ஆக. 17

அடுத்தமாதம் லுஸாகாவில் நடைபெறும் கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மகாநாட்டுக்கு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி செல்வார்.

இம் மகாநாட்டுக்குச் செல்லும் 14 பேர் கொண்ட இந்தியத் தூதுக்குழுவுக்கு திருமதி காந்தி தலைமைவகிப்பார். (ர)

## நியமனம்

திரு. பி. ராஜகோபால், ரயில்வே (தொழில் நுட்ப) பகுதி மேலதிக ஜெனரல் மனேஜராக நியமிக்கப்பட்டார்.

ரயில்வே பகுதியில் இவர் தற்போது பிரதம தொழில் நுட்ப பொறியியலாளராக கடமையாற்றுகின்றார்.

(ர)

### மீனாட்சி



என்னுங்க, இரவு எட்டரை மணி கடைகள் திறந்திருக்க வழி பிறக்குமா?

கடைகளைத் திறப்பதற்கு முன்னதாக அது பற்றிய சட்டமே ஊசலாடுது போல இருக்கே!

## குற்றவாளிகளான கடற்படை வீரர்கள் வேலை நீக்கம்?

திருகோணமலையில் கடந்த சனிக்கிழமை இரவு அட்டகாசம் புரிந்ததாகக் கடற்படை வீரர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறது அல்லவா? கடற்படை வீரர்களில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர். அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர்.

மேற்கண்டவாறு கடற்படைத் தளபதி விக்டர் ஹண்டர் "தந்தி" நிருபரிடம் உறுதி அளித்தார்.

கடற்படை வீரர்கள் சேதம் விளைவித்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ள இடங்களைப் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஆதர் இரத்தினவேலுவும், கடற்படைத் தளபதி விக்டர் ஹண்டரும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

திருகோணமலைப் பொது மக்களுக்கும் கடற்படை வீரர்களுக்குமிடையில் குழப்பம் ஏற்படுவதற்கான காரணம் பழைய விரோதமாக இருக்கலாம் என்று தளபதி ஹண்டர் "தந்தி" நிருபரிடம் கூறினார்.


முன்பு கடற்படை வீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஓர் உதைபந்தாட்டப் போட்டியின் பின் கைகலப்பு ஏற்பட்டது தெரிந்ததே.

கடற்படை வீரர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்டவர்கள் சேவையிலிருந்தும் நீக்கப்படுவார்கள் என்றும் தளபதி ஹண்டர் சொன்னார்.

தற்சமயம் சம்பவம் பற்றி பொலீஸார் விசாரணை நடாத்தி வருகிறார்கள்.

சம்பவத்தையொட்டிக் கடற்படை வீரர்களின் அடையாள அணிவகுப்பு ஒன்றும் நேற்று நடைபெற்றது.

அடையாள அணிவகுப்பில் யாராவது அடையாளம் காணப்பட்டார்களா என்ற விவரம் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (சு)



"பத்திக்" என்றால் புஷ்பாவுக்கு கொள்ளை ஆசை. வகை, வகையான ஆடை தைத்து மகிழும் இக் குமரி பல பத்திக் கண்காட்சியில் பரிசும் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆகஸ்ட் 8-ம் திகதி அடக்கம் செய்யப்பட்ட

# பிரேதத்தை தோண்டி எடுக்க அனுமதி மறுப்பு

ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி அடக்கம் செய்யப்பட்ட தனது தாயாரின் பிரேதத்தை சவக்குழியில் இருந்து தோண்டியெடுத்து மீண்டும் பரிசோதிக்க வேண்டுமெனவும்; தனது தாயாரின் மரணத்தில் தனக்குச் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகவும் காலஞ்சென்றவரின் மகள் செய்து கொண்ட மனு நிராகரிக்கப்பட்டது.

இந்த மனு கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது, மனுவைப் பரிசீலனை செய்த மாஜிஸ்திரேட், பிரேதத்தை மீண்டும் தோண்டியெடுக்க அனுமதியளிக்க முடியாது என்று கூறினர்.

காலஞ்சென்ற டாக்டர் சந்திரசேகரத்தின் விதவையான திருமதி பியட்ரிஸ் சந்திரசேகரம் மரணமாகவே, அவரது பிரேதம் ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி அடக்கம் செய்யப்பட்டது.

காலஞ்சென்றவர் கொழும்பில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு மரணமானதாகவும், அவரது மரணத்தையிட்டுத் தமக்குச் சந்தேகம் எழுந்துள்ளதாகவும், எனவே, பிரேதத்தை சவக்குழியில் இருந்து மீண்டும் தோண்டி எடுத்துப் பரிசோதிக்க வேண்டும் என்றும் கோரி, காலஞ்சென்ற திருமதி சந்திரசேகரத்தின் புதல்விகளுள் ஒருவர் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து, கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் சி. சிவசுப்பிரமணியம், பிரேதத்தைத் தோண்டியெடுத்துப் பரிசோதிக்கும்படி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் பரிசீலனை செய்த பொழுது, டாக்டர் கலீல், திருமதி ஐ. எம். பெருமாள் ஆகியோர் வாக்கு மூலங்களை அளித்தனர்.

மரணச் சடங்கு சம்பந்தமாக, காலஞ்சென்றவரின் புத்திரிகளான திருமதி பெருமாள், திருமதி நைல்ஸ் ஆகியோருக்கிடையே எழுந்த தகராறைத் தொடர்ந்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டதாகத் தாம் நம்புவதாகவும்; பிரேதத்தைத் தோண்டி எடுப்பதற்குத் தாம் அனுமதி தரமுடியாது என்றும் நீதிபதி கூறினர். (க)

### மரத்திலிருந்து விழுந்து மரணம்

எழுபது வயதான எம். எம். புஞ்சிராலா, கித்துள் மரத்தில் இருந்து விழுந்ததால் மரணமானார்.

வெலிமடை, கிரிம்பே என்னும் இடத்தைச் சேர்ந்த இவர், கள் இறக்குவதற்காக கித்துள் மரத்தில் ஏறியுள்ளார். கால் தவறி விழுந்து படுகாயமடைந்தார். பதுளை பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் மரணமடைந்தார்.

விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி, விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (கு-15)

### ஆலோசனைச் சபைகள்

இலங்கை போக்கு வரத்துச் சபையின் 52 டிப்போக்களுக்கும், ஊழியர் ஆலோசனைச் சபைகள் தெரிவு செய்யப்பட இருக்கின்றன.

ஒவ்வொரு டிப்போவும் திறமையாக இயங்கவும், நிர்வாகத்துக்கிடையே நல்லுறவு விளங்கவும், தலைமை அலுவலகத்துக்கு சரியான தகவல்களை வழங்கவும் ஊழியர் ஆலோசனை சபைகள் உதவும்.

ஊழியர் ஆலோசனை சபைகள் தெரிவு செய்வது சம்பந்தமாக தொழிற் சங்கங்கள் பலவற்றில் கருத்து வேறுபாடுகள் தோன்றி உள்ளதாக அறியப்படுகிறது.

ஊழியர் ஆலோசனை சபைக்கு நடைபெறும் தேர்தலை நடாத்துமாறு தேர்தல் திணைக்களம் கேட்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூறு தொழிலாளிக்கும் ஒரு பிரதிநிதி என்ற ரீதியில் நடைபெறலாம் எனத் தெரிகிறது. (க)

### அம்மாவிடம் சொல்லும்படி அணங்கிடம் கெஞ்சினாராம்

ஆரணங்கு ஒருத்தியைக் காதலித்த ஆடவர் ஒருவர், தங்கள் திருமண விஷயம் பற்றி அவளது அம்மாவிடம் சொல்லி ஏற்பாடு செய்யும்படி கூறி, அந்தக் காதலிக்குக் கெஞ்சிக் கடிதமொன்று வரைந்தாராம். அந்தக் கடிதம் நீதிமன்றத்தில் வாசித்துக் காட்டப்பட்டது.

வெலிதொடப்பொல என்ற இடத்தைச் சேர்ந்த எச். என். தயாவதி மெனிக்கே என்ற விதவைப் பெண், தனக்கும் தனது குழந்தைக்கும் ஜீவனாம்சம் பெற்றுத் தருமாறு கோரி, தற்காலிக தபால் சேவகரான எஸ். டபிள்யூ. எம். திலகரத்தின என்பவர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு கண்டி மாஜிஸ்திரேட் திரு. எப். பி. ஜி. பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுதே மேற்படி "கெஞ்சல் கடிதம்" வாசித்துக் காட்டப்பட்டது.

மனுதார் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்குப் பதில் அளித்த எதிர் மனுதார் பின்வருமாறு கூறினர்:—

"நான் கடமையாற்றிய தபால் கந்தோருக்கு அருகிலேயே மனுதாரின் வீடு இருக்கிறது. மனுதாருக்கும் எனக்கும் கடிதத் தொடர்பிருந்தது உண்மை. ஆனல் நான் அவருடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் உடலுறவு வைத்துக் கொள்ளவில்லை. எனவே குழந்தையின் தந்தை நான் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது."

வழக்கு விசாரணை ஆகஸ்ட் 22-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (க)

### 'அண்ணனுக்கு 3 மனைவிகள் இருந்தது எனக்குத் தெரியாது'

"எனது அண்ணனுக்கு மூன்று மனைவிகள் இருந்ததாக எனக்குத் தெரியாது. மகாகெதரயில் ஓர் ஆசைநாயகி இருந்தார். சொந்த மனைவி வேறோர் இடத்தில் வசிக்கிறார்."

மத்துகம நீதவான் திரு. நிஸங்கா வீரரத்ன முன்னிலையில் விசாரிக்கப்பட்ட கொலை வழக்கில், 15 வயது மாணவன் டி. டி. சிலவன்ஸா மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தான்.

ஓமட்டா வழக்கு எனப் பெயர் பெற்ற இவ்வழக்கில், அகலவத்தை, ஓமட்டா என்னுமிடத்தை சேர்ந்த டி. டி. சந்திரதாச கொலை செய்யப்பட்டவராவார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோரும் பிள்ளைகளுமான டபிள்யூ. குணவர்த்தன, சோமதாஸ, ஹேமச்சந்திரா, டைல்ஸ் சிங்கோ, ஆரியவதி, பொடிநோனா ஆகியோர் எதிரிகளாவர்.

சிலவன்ஸா மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"ஒரு கால்வாயைக் கடந்து தான் எமது வீட்டுக்கு வர வேண்டும். சம்பவம் நடைபெற்ற அன்று, சந்திரதாஸ என்னைக் கூப்பிட்டு ஒரு பார்சல் தந்தார். அவ்வமயம் கால்வாயின் மறு கரையில் முதல் எதிரி ஒரு வாளுடன் நின்று, "நீ ஒரு காடையன் போல் நடக்கிறாய். உனக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறேன்" என்றார். நான் பார்சலுடன் வீட்டிற்கு ஓடி விடயம் கூறினேன். எனது மற்ற அண்ணனுடன் அவ்விடம் வந்தேன். அப்பொழுது முதல் எதிரி சந்திரதாசாவை வாளால் வெட்டினார். இரண்டாம் எதிரி பொல்லால் அடித்தார். மூன்றாவது எதிரி எனது அண்ணன் நந்ததிலகாவைக் குத்தினார். நான் தன்னங்கராவின் வீட்டிற்குள் ஓடி, கதவுகளை மூடிக் கொண்டேன். ஜன்னலால் பார்த்த போது நாலு எதிரிகளும் மீண்டும் சந்திரதாசாவையும் நந்ததிலகாவையும் தாக்குவதைக் கண்டேன்" என்றார்.

இறந்தவரின் தாயாரும் சாட்சியம் அளித்தார். வழக்குத் தொடர்ந்து நடைபெறுகிறது. (கு-15)

### இரு நபர்கள் மீது பொலீஸ் வலை வீச்சு

மூன்று பிள்ளைகளின் தந்தையான மாத்தறை தெந்தவெலயைச் சேர்ந்த எஸ். டபிள்யூ. ரொமாலிஸ் (33) என்பவரைக் கொலை செய்ததாக இருவரை மாத்தறைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

கத்தியால் வெட்டி இவர் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. (கு-15)

### 'அண்ணனின் மடியில் அண்ணி படுத்துக்கிடந்தார்'

"இறந்தவர் என் மைத்துனி. நான் அங்கு போன சமயம் அண்ணனின் மடியில் அண்ணி படுத்திருந்தார். கழுத்திலிருந்து இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது."

எம். கே. நந்தாவதி மேற்கண்டவாறு சாட்சியம் அளித்தார்.

மத்துகம நீதவான் திரு. நிஸங்கா வீரரத்ன முன்னிலையில் அத்வெல் தோட்ட கொலை வழக்கு விசாரிக்கப்பட்டது.

இவ்வழக்கில் யூ. கே. பேமாவதியை கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக யூ. கே. டைல்ஸ் சிங்கோவும் மற்றும் நால்வரும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

எம். கே. நந்தாவதி மேலும் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"ஒரு மணியளவில் தண்ணீர் கொண்டுவரச் செல்கையில், இச் சம்பவத்தைக் கண்டேன். ஐந்து எதிரிகளும், என் மைத்துனி, அண்ணன் ஆகியோர் ஒரு இடத்தில் நிற்பதைக் கண்டேன். முதல் எதிரி கையில் துவக்கும், மற்றவர் கைகளில் கத்தி, பொல்லுகளும் இருந்தன. நான் அங்கு போகும் சமயம் எதிரிகள் முதல் எதிரியின் வீட்டுப் பக்கம் போயினர். மூன்றும் எதிரி அண்ணியை வெட்டிவிட்டதாகக் கூறினர்.

அண்ணி தண்ணீர் கேட்டார். கொண்டு வந்து கொடுத்தேன். குடித்துச் சற்று நேரத்தால் இறந்து போனார்" என்றார்.

வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (கு-15)

### இரண்டு வருட கடுங்காவல்

ஓமாட்டாவைச் சேர்ந்த டபிள்யூ. ரணசிங்கா, என்பவரைச் சுட்டுக் காயப்படுத்தியதற்காக எல்பிட்டியாவைச் சேர்ந்த ஜீ. யசாரத்னவுக்கு இரு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு காலி உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஜீ. பி. ஏ. சில்வா முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. (கு-15)

### இடமாற்றம்

திரு. எஸ். ஈ. வைத்திலிங்கம், பேராதனை விவசாய திணைக்களத்திலிருந்து நீதி அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் கொழும்பு சுப்ரீம் கோர்ட், கொழும்பு மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றில் கடமையாற்றியவராவார். (க)

### காப்பாற்றி வைப்பதாக

அம்மணக் கோலத்தில் வழிபட்டவர்களின் செய்தியை நேற்றுத் தினம் படித்திருப்பீர்கள். மேலைநாட்டு நாகரிகம் இந்த வகையில் போய்க் கொண்டிருக்கின்றது. கஞ்சா, எல். எஸ். டி., அபின், ஹிப்பி வாழ்வு, அம்மண வாழ்வு இவையெல்லாம் நாகரிகத்தின் அதல பாதாளத்திற்கு இட்டுச் செல்பவைகள் அன்றி வேறு யாதுமில்லை. ஈற்றில் பகுத்தறிவு படைத்த மனிதனுக்கும், பகுத்தறிவற்ற மிருகத்துக்கும் வேற்றுமையையே தேடுவதோ கண்டு கொள்ள முடியுமோ என்ற நிலை ஒருகால் வந்தெய்தினாலும் இன்றைய போக்கில் எவரும் ஆச்சரியப்பட மாட்டார். கீழைத்தேசப் பண்பாடும், கலாசாரமும், கடவுள் வழிபாட்டு முறையும் நம்மவரை இந்தக் காட்டுமிராண்டித் தனங்களில் இருந்து காப்பாற்றி வைப்பதாக.

**தந்தி**

விற்பனை பெருக விளம்பரம் செய்க

தந்தி
சிறு விளம்பரங்கள்

வசியம்

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொல.

R. 69891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிருக்குயிராக நேசித்து வந்த

# காதலியின் திருமண செய்தி கேட்டு மரணம்

### கணமும் அவளை நான் மறவேன் என்றாராம்!

தான் உயிருக்கு உயிராகக் காதலித்து வந்த கன்னிப் பெண்ணுக்குக் கல்யாணம் பேசி முடிவு செய்யப்பட்டுவிட்டதை அறிந்த கட்டிளங்காளை ஒருவன் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்ட பரிதாப சம்பவம் ஒன்று மீகாவத்தை என்ற இடத்தில் நடைபெற்று இருக்கிறது.

ஜி. டி. கருணாரத்தின என்ற இளைஞனே இந்தப் பரிதாப முடிவைத் தேடிக் கொண்டவனாவான். அவனது மரணம் சம்பந்தமாக மீகாவத்தை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். டி. டப்ளியூ. குலரத்தின விசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் சகோதரரான ஜி. டி. கருணாதாச சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"காலஞ்சென்றவர் எந்து சகோதரர். எங்கள் தூரத்து உறவினளான ஒரு யுவதியுடன் அவர் காதல் கொண்டிருந்தார். தான் அந்த யுவதியைத் தவிர வேறு யாரையுமே திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று காலஞ்சென்றவர் தனது நண்பர்களிடம் கூறியுள்ளார். அந்த அளவுக்கு அந்த யுவதிமீது அவர் காதல் கொண்டிருந்தார்.

"அண்மையில் அந்த யுவதிக்கு வேறு ஆடவரைக் கல்யாணம் பேசி முடிவு செய்துவிட்டதாகக் கேள்விப்பட்டோம். அது முதல் காலஞ்சென்றவர் மனக் குழப்பத்துடன் காணப்பட்டார்.

"நடந்த சம்பவங்களை மறந்து விட்டு, புதிய வாழ்க்கையை சந்தோஷமாக அமைத்துக் கொள்ளும்படி நான் பலமுறை அவருக்குப் புத்திமதி கூறினேன். எப்படித் தான் இருந்தாலும், தான் உளமாரக் காதலித்த அவளை என்றுமே மறக்க முடியாது என்று அவர் கூறினார்.

"சம்பவம் நடைபெற்ற தினத்திற்கு முன்தினம் பிற்பகல் அவர் வீட்டை விட்டு வெளியே சென்றார் மறுநாள் காலையில் ஒரு பாடசாலை உத்தரத்தில் தூக்குப் போட்டுக் கொண்டுஅவர் தற்கொலை செய்து விட்டதாகக் கேள்விப்பட்டேன்"

காலஞ்சென்றவரின் சகோதரியான ஜி. டி. சந்திராவதியும் மற்றும் பலரும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து, மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பளித்தார். (க)

### கடந்த நூற்றாண்டு போர் வீரன் நேற்று மரணம்

கோலாலம்பூர், ஆக. 17

தனது 123-வது வயதில் நேற்றுக் காலமான மட் கிலோ என்பவரின் பூதவுடலை அரசாங்க மரியாதைகளுடன் அடக்கம் செய்ய மலேஷிய அரசாங்கம் தீர்மானித்து உள்ளது.

பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் கீழ் மலாயா இருந்த போது 1890-ம் ஆண்டளவில் நாட்டின் விடுதலைக்காகப் போரிட்டவர்களில் மட் கிலோ முக்கியமானவர் என்று மலேஷிய உதவிப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் தெரிவித்தார்.

நாட்டின் விடுதலை வேட்கைக்கு ஆரம்பத்தில் வித்திட்ட தலைவர்களில் இற்றைவரை உயிருடன் இருந்தவர் மட் கிலோ, ஆவார்.

### மனைவியையும்மாமியையும் கொன்ற பிறகு தற்கொலை

மனைவியையும் அவளது தாயையும் கொலை செய்து விட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டாரும் ஒரு விவசாயி. இந்தச் சம்பவம் திருகோணமலையிலிருந்து சுமார் 17 மைல் தூரத்தில் உள்ள முள்ளிப்பொத்தான என்ற இடத்தில் நிகழ்ந்திருக்கிறது.

திருகோணமலை மாஜிஸ்திரேட் திரு. டி. சி. டபிள்யூ. விக்கிரமசேகரா விசாரணை நடத்தினார். விசாரணையின்பொழுது தெரிய வந்ததாவது:–

கொலை செய்யப்பட்ட மனைவியின் பெயர் யூ. ஜி. பிரேமாவதி, வயது 25. கொலை செய்யப்பட்ட தாயின் பெயர் ஜீ. என். பி. ஹீன் மெனிக்கா. வயது 50. இந்த இருவரையும் கொலை செய்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்ட விவசாயியின் பெயர் புஞ்சி பண்டார. வயது 30.

பிரேமாவதி தனது தாயாருடன் கண்டியில் வசித்து வந்தார். குழந்தைகளும் பிரேமாவதியுடனேயே வளர்ந்து வந்தனர். சம்பவம் நடைபெற்ற தினம் பிரேமாவதி தன் தாயாருடன் முள்ளிப்பொத்தானையில் இருந்தபொழுது புஞ்சிபண்டாரவைச் சந்தித்தனர். அப்பொழுது வாக்குவாதம் கிளம்பியது.

புஞ்சிபண்டா ஒரு மண்வெட்டியினாலும் கத்தியினாலும் தன் மனைவியையும் அவளது தாயையும் தாக்கினார். அவர்கள் இருவரும் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார்கள். அதன் பிறகு புஞ்சிபண்டா கிருமி நாசினியை உட்கொண்டு தற்கொலை புரிந்து கொண்டார்.

சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்ட மாஜிஸ்திரேட், பிரேமாவதியினதும், ஹீன் மெனிக்காவினதும் மரணம் கொலை என்றும், புஞ்சிபண்டாவின் மரணம் தற்கொலை என்றும் தீர்ப்பளித்தார். (க)

### செல்வரத்தினம் போட்டியின்றி தெரிவானார்

பண்டத்தரிப்பு பட்டின சபை 3-ம் வட்டார இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் சபையின் அலுவலகத்தில், யாழ்ப்பாண தேர்தல் அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முன்னைய சபைத் தலைவரான திரு. இ. செல்வரத்தினத்தைத் தவிர வேறு ஒருவரும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யாதபடியால், இவரே இவ்வட்டாரத்திற்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளாரென தேர்தல் அதிகாரி பிரகடனப்படுத்தினார்.

ஆட்சேபனை மனு மூலம் உயர் நீதிமன்றத்தால் இவரின் அங்கத்துவம் ரத்துச் செய்யப்பட்டது தெரிந்ததே. (க)

### கிராமசேவகர்களுக்கு இனி அரசியல் உரிமை கிடையாது

பொலீஸ், மற்றும் முப்படைச் சேவைகளைப் போல் கிராம சேவகர் பிரிவும் விசேஷ சேவையாக மாற்றப்பட உள்ளது.

கிராமசேவகர்களுக்கு அரசியல் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பட மாட்டாது.

பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு முடிவு செய்துள்ளார்.

முப்படைகளைச் சேர்ந்தவர்களுக்கும், பொலீஸாருக்கும் மற்றும் அரசாங்க சேவையில் உள்ள உயர் அதிகாரிகளுக்கும் அரசியல் உரிமைகள் வழங்கப்பட மாட்டாது என்பதும் தெரிந்ததே.

கிராம சேவகர் சேவையைப் பிராந்திய ரீதியில் ஏற்படுத்துவதற்கு திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா முடிவு செய்துள்ளார்.

அத்துடன் கிராம சேவகர்களின் பதவி நியமனங்கள், இடமாற்றங்கள் ஆகியவற்றை அரசாங்க சேவைக் கமிஷனின் அனுமதியுடன் அரசாங்க அதிபர்களே கையாளுவார்கள். (க)

### பாண் தயாரிக்கும் காடி இலங்கையில் உற்பத்தி

பாண் தயாரிப்பதற்குத் தேவையான காடியை உற்பத்தி செய்வதற்கு விரைவில் தொழிற்சாலை ஒன்று இலங்கையில் நிறுவப்பட உள்ளது.

இலங்கைக்குத் தேவையான காடியை இளநீரில் இருந்து பெற முடியும்.

சமீபத்தில் இது சம்பந்தமாக நடைபெற்ற ஆராய்ச்சிகள் வெற்றி அளித்துள்ளன.

தற்பொழுது தெங்குப் பொருள் வர்த்தகத் துறையில் இளநீர் ஒன்றுக்கும் பிரயோசனப்படுத்தப்படுவதில்லை.

உத்தேச தொழிற்சாலை மூலம் இலங்கை வருடம் 6 கோடி ரூபாவை மீதப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் காடி, கசிப்புத் தயாரிப்பவர்களின் கையில் பெருமளவில் சிக்குவதாகக் கூறப்படுகிறது.

நாட்டில் தொழிற்சாலை ஒன்றை நிறுவி காடி இறக்குமதிக்கு முற்றுப்புள்ளி வைப்பது மூலம் கசிப்புத் தயாரிப்பாளர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அரசாங்கம் கருதுகிறது.

உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்னவின் சிபார்சுக்கு இணங்க கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் உத்தேச தொழிற்சாலையை நிறுவ உள்ளது எனத் தெரிகிறது. (க)

### 'இந்துக்களுக்கும் புனித நகர் பிரதேசம் வேண்டும்'

"சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்துக் கோவில் அமைந்துள்ள இடம் ஒன்றைப் புனித பிரதேசமாக்க வேண்டும்"

அகில இலங்கை இந்து காங்கிரஸும், மற்றும் சைவ மத ஸ்தாபனங்களும் கலாசார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகாவைச் சந்தித்து மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கத் தீர்மானித்துள்ளன.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில், இது சம்பந்தமாக தூது கோஷ்டிகள் பல சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தின.

திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நல்லூர் முருகன் கோவில் ஆகியவற்றைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என காலத்துக்குக் காலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்துள்ளன. (க)

### கொள்ளைச் சம்பவ சந்தேக நபர்கள் நால்வர் கைது

புனையில் துப்பாக்கி முனையில் நடைபெற்ற ரூபா 25 ஆயிரம் கொள்ளைச் சம்பவத்தை அடுத்து நால்வர் கைது செய்யப்பட்டு உள்ளனர். ஒரு காரையும் பொலீஸார் கைப்பற்றினர். கொள்ளை அடிக்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டது.

காத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கி வாடகைக் காரில் பிரயாணம் செய்த ஒரு வர்த்தகரிடம் இருந்த 25 ஆயிரம் ரூபா புனையில் வைத்து துப்பாக்கி முனையில் கொள்ளை அடிக்கப்பட்டது தெரிந்ததே!

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து புலன் விசாரணைகளில் ஈடுபட்ட வாழைச்சேனை பொலீஸ் இன்ஸ்பெக்டர் எஸ். ஜி நாணயக்கார தலைமையிலான பொலீஸ் கோஷ்டி ஒன்று நால்வரைக் கைது செய்ததோடு ஒரு காரையும் கைப்பற்றி உள்ளது.

கல்முனை, பாண்டிருப்பைச் சேர்ந்த எஸ். கிருபைராசா, ஏ. குணரத்தினம், பூண்டுலோயா கட்டுக்குலத்திலவைச் சேர்ந்த யூ. பீ. சைமன், எச். தர்மதாச ஆகிய நால்வருமே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

கொள்ளைச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் ஒரு காரையும் ரூபா 21,597,40 ரொக்கமும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டு உள்ளதாகத் தெரிகிறது.

பணத்தைப் பறிகொடுத்த சீனி முகம்மது முஸ்தபா என்பவர், நூறு ரூபா நோட்டுகளும் ஐம்பது ரூபா நோட்டுகளுமே வைத்திருந்ததாகவும் அவற்றின் இலக்கங்களை எழுதி வைத்திருந்ததாகவும் தெரிவித்து இருந்தார்.

கைப்பற்றப்பட்ட ரூபா நோட்டுகளின் இலக்கங்களும் இவற்றை ஒத்திருப்பதாகத் தெரிகிறது.


சந்தேக நபர்கள் விளக்க மறிய...

### துரிதமான தகவல் சேவை

லண்டன், ஆக. 17

விவசாய உலகில் இடம்பெறும் சகல நவீன அபிவிருத்திகள், முன்னேற்றங்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன், ஆராய்ச்சியாளருக்கு அளிக்கும் துரித சேவையை சாம்ராஜ்ய விவசாய கழகம் விரைவில் கொணர இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்கு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியா மாவட்டத் தொழிலாளர்கள் ஜனப் ஏ. அஸீஸ் எம். பி. தலைமையில் நுவரெலியா நகர சபை மண்டபத்தில் வரவேற்பு அளித்த பொழுது பிடிக்கப் பட்ட படம்.

# தொழிலாளர்களுக்கே தோட்டம் சொந்தம்

## அரசாங்க கொள்கை பற்றி அமைச்சர் குமாரசூரியர்

"தேயிலைத் தோட்டங்கள், அவற்றில் உழைக்கும் தொழிலாளர்களுக்கே சொந்தமானவையாகும். வேலை செய்பவர்களுக்கே வேலைத்தளம் சொந்தமாக வேண்டும் என்பதே ஐக்கிய முன்னணியின் கொள்கை".

ஐ. தொ. கா. நுவரெலியா மாவட்டக் கிளையின் சார்பில் ஐக்கிய முன்னணியின் வெற்றி விழா கொண்டாடப்பட்ட பொழுது, அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தபால். தந்தி போக்குவரத்து அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:—

"தேயிலைத் தோட்டங்களைத் தேசிய மயமாக்க வேண்டும் எனப் பலர் கூறுகின்றனர். ஏன் தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட வேண்டும்?, என்பது ஒரு கேள்வி. மக்கள் அரசாங்கம் தேயிலைத் தோட்டங்களை அரசுடைமையாக்காது. சிங்களவர்களாயிருப்பினும் சரி, தமிழர்களாயிருப்பினும் சரி, இஸ்லாமியர்களாயிருப்பினும் சரி, தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கே அது உரிமையுடையதாகும். வேலை செய்பவர்களுக்கே, வேலைத் தளம் சொந்தமாக வேண்டும் என்பது ஐக்கிய முன்னணியின் கொள்கை.

"ஏரிக்கரைப் பத்திரிகைகளை ஏன் அரசு எடுக்கவில்லை என்று கேட்கின்றனர். உடனடியாக அதை அரசு உடைமையாக்கி விட்டால். பணம் கடத்துதல் போன்ற ஊழல்கள் நிரம்பியவர்களுக்குத் தண்டனை வழங்க முடியாது போய் விடும். எனவே. ஊழலைக் கண்டு பிடிக்க விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணை முடிவடைந்ததும், அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுக்கும்.

"கைத்தொழில்களையும் இன்னும் பலவற்றையும், மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நிலைமை புதிய அரசியலமைப்பு ஏற்பட்டதும் படிப்படியாக தோற்றுவிக்கப்படும்.

"இந்நாட்டில், சாதி, மத. இன வேறுபாடின்றி மக்கள் அனைவரும் சமத்துவமாக வாழ வேண்டும் என்பது தான் ஐக்கிய முன்னணியின் கொள்கையாகும். இந்நாடு சுபீட்சமாக இருக்க வேண்டுமானல் ஊழல்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும். அதுவே சோஷலிஸத்துக்கான திறவு கோல். அமைச்சர்கள் அரசாங்கச் செலவில் ஆடம்பரமாக வாழ்ந்த காலம் மலையேறி விட்டது. என்னைப் பொறுத்தவரை இது ஒரு புதிய சகாப்தம் என்றே சொல்வேன்".

ஐ. தொ. கா. தலைவரும், நியமன எம். பி. யுமான ஜனப் ஏ. அஸீஸ் பேசுகையில் கூறியதாவது:—

"இந்நாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் நாட்டில் உள்ள சமூகத்தினரிடமிருந்து, இதுவரை காலமும் பிரித்து வைக்கப் பட்டிருந்தனர். இதற்குக் காரணம், ஐக்கிய தேசியக் கட்சியும், இ. தொ. கா. வுந்தான். ஆனல் ஐக்கிய முன்னணியை ஆட்சிப் பீடமேற்றியதன் காரணமாக இந்நாட்டில் வாழும் ஏனைய மக்களோடு தோட்டத் தொழிலாளர்கள் இரண்டறக் கலந்து விட்டனர். அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், தோட்டத் தொழிலாளர்கள், பெரும்பான்மையினத்தவரோடு ஒற்றுமைப்பட்டு, ஐக்கிய முன்னணி அரசின் சோஷலிஸ நிர்மாணத்திற்கு அயராதுழைப்பதை எத்தகைய சக்திகளாலும் தடுத்து நிறுத்தி விட முடியாது.

"ஐக்கிய முன்னணி அரசினைப் போல் வேறு எந்த அரசாங்கமும் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் அக்கறை செலுத்தவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியானது மக்களின் துன்பங்களையும், துயரங்களையும் பொருட்படுத்தவில்லை. அதனல்தான் அது மிகவும் மோசமான முறையில் தோல்வியடைந்தது.

"ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்த அமுல் பற்றி பேசுகின்றவர்கள், ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல்பவர்களுக்கு, சேமலாப நிதி, சேவை காலப் பணம் ஆகியன பற்றி எதுவும் கூறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் 5 ஆண்டு கால ஆட்சியின் போது சாதிக்காதவைகளை எல்லாம் ஐக்கிய முன்னணி அரசு 3 மாத காலத்தில் தீர்த்து வைத்துள்ளது.

"1965-ம் ஆண்டில் தேர்தல் பிரசாரத்தின் போது கொச்சிக்காயின் விலை ரூபா 1-90 ஆக இருந்தது. நாங்கள் பதவிக்கு வந்தால், விலையைக் குறைப்போம், வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுத்து நிறுத்துவோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறினர். ஆனல் அவர்கள் பங்கீட்டரிசியை ஒரு கொத்தாகக் குறைத்துத் தொழிலாளரின் வயிற்றில் அடித்தனர். இந்த ஒரு கொத்து அரிசியை ஐக்கிய முன்னணி மீண்டும் செப்டம்பர் மாதம் 26-ம் திகதி வழங்கப் போகிறது.

"பெரும்பான்மை சமூகத்தினருக்குத் தெரியாமலோ அல்லது சிறுபான்மை சமூகத்திற்குத் தெரியாமலோ எந்தச் செயலையும் மறைமுகமாகச் செய்தால் அது நாட்டுக்கு இழைக்கும் துரோகமாகும்.

"மலையக மக்களை ஏனைய மக்களிடமிருந்து பிரித்துச் செயல்படவே வகுப்பு வாதச் சங்கங்கள் நினைக்கின்றன. இதன் மூலம் அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளைப் பின்பற்றுகின்றனர். ஐக்கிய முன்னணியும், ஐ. தொ. கா-வும் மலையகத்து சிங்கள, தமிழ், இஸ்லாமிய தொழிலாளர்களுக்கு ஆற்றும் சேவையை எவரும் தடுத்து நிறுத்தி விட முடியாது".

(க)

## பண்டாரநாயக்கா நினைவு தினம் சிறப்பாக நடைபெறும்

காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவின் 12-வது சிரார்த்த தினம் செப்டம்பர் 26-ம் திகதி அகில இலங்கை ரீதியில் கொண்டாடப்பட உள்ளது.

அன்றைய தினம் அரசாங்க விடுமுறையாகும். சிரார்த்த தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு ஆறு பேர் அடங்கிய மந்திரி சபை உப கமிட்டி ஒன்றை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நியமித்துள்ளார்.

திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் தலைமையிலான இந்தக் கமிட்டியில் மற்றும் திருவாளர்கள் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, ரி. பி. இலங்கரத்ன, பி. பி. ஜி. கலுகல்லே, எஸ். எஸ். குலதிலா, கே. பி. இரத்நயக்கா ஆகியோர் உள்ளனர் (க)

## பனிப் புயலில் சிக்கியதால் பன்னிரண்டு பேர் மரணம்

ஸ்ரீநகர், ஆக. 17

இமயமலையில் பயங்கரப் பனிப் புயலில் சிக்கி, 12 இந்து யாத்திரிகர்கள் மரணமானர்கள். இதனல் அமர்நாத் குகைக்கு யாத்திரை மேற்கொண்டிருந்த 15 ஆயிரம் பேரின் பயணம் தடைப்பட்டது.

கடல் மட்டத்தில் இருந்து 13 ஆயிரம் அடி உயரமான சிஷ்ஹாகே மலையில் பனிப் புயலில் சிக்கி இந்த 12 யாத்திரிகர்களும் மரணமானதை அடுத்து யாத்திரையைக் கைவிடும்படி அரசாங்க அதிகாரிகள் மக்களைக் கேட்டுக் கொண்டனர்.

யாத்திரிகர்கள் கோஷ்டியில் இடம் பெற்றிருந்த சுமார் 100 வெளிநாட்டுக்காரர்கள் பத்திரமாக பஹல்காம் பட்டினத்தை அடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

காஷ்மீரின் தலை நகரான ஸ்ரீநகரில் இருந்து சுமார் 90 மைல் தொலைவில் இருக்கிறது அமர்நாத் குகை. சிவபெருமான் தவம் இருந்ததாகக் கூறப்படும் இந்தத் தலத்துக்கு வருடா வருடம் யாத்திரிகர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருவதுண்டு. (க)

## விளையாட்டுத்திடல் கலவரத்தில் நான்கு பாகிஸ்தானியர் மரணம்

டாக்கா, ஆக. 17

பாகிஸ்தானின் சுதந்திர தினத்தன்று இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் போது நடந்த கலவரத்தினல் கொல்லப்பட்டவர்களின் தொகை நான்காக அதிகரித்துள்ளது.

மாண்டவர்களில் எட்டு வயதுச் சிறுவனும் ஒருவன். இத்துடன் 246 பேர் படுகாயமடைந்துள்ளனர், காயமடைந்தவர்கள் சுமார் 100 பேர் பொலீஸ் அதிகாரிகள் என்று கூறப்படுகிறது.

உதைபந்தாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சுவர் ஏறிக் குதித்த இளைஞன் ஒருவனை பொலீசார், துன்புறுத்தியதை அடுத்தே கலவரம் ஏற்பட்டது.

பொலீசாரைப் பொதுமக்கள் தாக்கத் தொடங்கினர். நான்கு பொலீஸ் ஜீப்புகள் தீக்கிரையாக்கப்பட்டன. 71 பேர் கைது செய்யப்பட்டனர். (க)

## மனேஜர் வெளியேற்றம்

ஆத்திரம் கொண்ட ஊழியர் கோஷ்டி ஒன்றினல் கொழும்பு நகரிலிருக்கும் கம்பெனி ஒன்றின் மனேஜர் ஒருவர் காரியாலயத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்.

கடந்த பல மாதங்களாக இந்தக் கம்பெனி ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தவில்லை என அந்த ஊழியர்கள் கூறியுள்ளனர். (ர)

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு – 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 18 ஆகஸ்ட் 1970.
Thanthi, 5 Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org